
# இரண்டு இரவு விடுதிகள் மூடப்பட்டன

# 43 பேர் பிடிபட்டனர்

கோலாலம்பூர், ஜூலை 16-

அதிரடி சோதனையின் போது வாடிக்கையாளர்கள் உட்பட 43 பேர் கைது செய்யப்பட்டனர். அதே சமயத்தில் இரண்டு மதுபான விடுதிகளும் இழுத்து மூடப்பட்டன.

நேற்று அதிகாலை 2.00 மணியளவில் ஜாலான் துன் எச்.எஸ்.லீ. மற்றும் ஜாலான் மெட்ரோ புடு ஆகிய இடங்களில் திடீர் சோதனைகள் நடத்தப்பட்டன.



கூட்டரசுப் பிரதேச இஸ்லாமிய சமய மன்றம், கூட்டரசுப் பிரதேச போதைப் பொருள் துடைத்தொழிப்பு வாரியம் மற்றும் கோலாலம்பூர் மாநகராட்சி மன்றம் ஆகியவற்றை சேர்ந்த அதிகாரிகள் இந்த சோதனைகளை நடத்தினர்.

சம்பந்தப்பட்ட அந்த மதுபான விடுதிகள் முறையான உரிமைகளை கொண்டிருக்க வில்லை. மதுபான மற்றும் கேளிக்கை விடுதியாகவும் அவை செயல்பட்டு வந்தன. 1992ஆம் ஆண்டு கேளிக்கை சட்டம் செக்ஷன் 17 விதியின் கீழ் அவை உடனடியாக மூடப்பட்டது.

மேலும் அந்த விடுதிகளில் இருந்த 16 ஆண்களும் 27 பெண்களும் கைது செய்யப்பட்டனர். 1997 ஆம் ஆண்டு ஷரியா குற்றச் செயல் சட்டம் செக்ஷன் 19 விதியின் கீழ் அவர்கள் கைது செய்யப்பட்டனர்.

போதைப்பொருள் உட்கொண்ட காரணத்திற்காக மேலும் 7 பேர் 1983ஆம் ஆண்டு போதை அடிமை சட்டம் செக்ஷன் 3 விதியின் கீழ் பிடிபட்டனர்.